பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

04 05 2025 **SUNDAY** 6 30 **PM**

வணக்கம் - மாநிலச் செய்திகள்
தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திர மோடி, விமானப் படை தளபதி ஏர்சீப் மார்ஷல் ஏ.பி. சிங்குடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.
- விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக அதிகரிக்க 6 அம்ச திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.
- தேர்தல் ஆணையம் அதன் அனைத்து சேவைகளையும் ஒருங்கிணைந்து வழங்கும் வகையில் செயலி ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளது.
- தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
- பேங்காக் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee - Abhinandh Pradhivadhi** இணை பட்டம் வென்றது.

**>>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி, விமானப் படை தளபதி ஏர்சீப் மார்ஷல் ஏ.பி. சிங்குடன் இன்று புதுதில்லியில் ஆலோசனை மேற்கொண்டார்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் சம்பவத்தை அடுத்து, பாதுகாப்புப்படை உயரதிகாரிகளுடன் பிரதமர் தொடர்ந்து ஆலோசனைகளை மேற்கொண்டு வருகிறார்.

இதற்கிடையே, ஜம்மு காஷ்மீர் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் படையினர் தொடர்ந்து 10வது நாளாக அத்துமீறி தாக்குதல் நடத்தி வருவதாகவும் இதற்கு ராணுவம் உரிய பதிலடி கொடுத்து வருவதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

**>>>>>><<<<<**

விவசாயிகளின் வருவாயை இரண்டு மடங்காக அதிகரிக்க 6 அம்ச திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருவதாக வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் மரபணு பகுப்பாய்வு செய்யப்பட்ட இரண்டு நெல் ரகங்களை வெளியிட்டு அவர் பேசினார்.

நாட்டிலேயே முதன்முறையாக இந்த நெல் ரகங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

உற்பத்தியை அதிகரிக்கவும், செலவினங்களை குறைக்கவும் இந்த புதிய ரகங்கள் உதவிடும் என்று அவர் கூறினார்.

இதற்கு காரணமான வேளாண் விஞ்ஞானிகளுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் விஞ்ஞானிகள், ஆராய்ச்சியின் பலன்களை விவசாயிகளுக்கு நேரடியாக கொண்டு போய் சேர்க்க வேண்டும் என்றும் திரு. சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

இதற்கிடையே, இந்த புதிய நெல் ரகங்கள் அதிக மகசூலை தரக்கூடியது என்று இந்திய அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் திரு. த.வி. வெங்கடேஸ்வரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – த.வி. 65 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

தேர்தல் ஆணையத்தின் அனைத்து சேவைகளையும் ஒருங்கிணைந்து வழங்கும் வகையில் கைபேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

தற்போது செயல்பாட்டில் உள்ள 40 செயலிகளை ஒருங்கிணைத்து இந்த புதிய செயலி அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

வாக்காளர்களின் நலனை கருத்தில் கொண்டு, இந்த ஒருங்கிணைந்த கைபேசி செயலி உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

தமிழகத்தின் ஒருசில பகுதிகளில் அடுத்த 24 மணி நேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 48 செகண்ட்ஸ்)

இதற்கிடையே, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று பிற்பகல் முதல் பரவலாக மழை பெய்து வருகிறது.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து வந்த நிலையில் இன்று மழை பெய்தது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுமன் - 39 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

திண்டுக்கல் மாவட்டம், எட்டையாம்பட்டி கிராமத்தில் இன்று மீன்பிடி திருவிழா நடைபெற்றது.

ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ராஜசேகரன் 38 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

நீலகிரி மாவட்டத்தில் கோடை விழா தொடங்கியதை அடுத்து, அங்கு செல்லும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, உதகை செல்லும் மலைப்பாதை ஒருவழிப்பாதையாக மாற்றப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சரவணன் 33 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை சித்திரை திருவிழாவை முன்னிட்டு, தமுக்கம் மைதானத்தில் அரசு பொருட்காட்சியை மாநில அமைச்சர் திரு. மூர்த்தி தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<

திருப்பூர் மாவட்டம், தாராபுரம் பகுதியில் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது பாலத்திற்காக தோண்டப்பட்ட குழியில் தவறி விழுந்து உயிரிழந்த தம்பதியினரின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் நிதியுதவியை மாநில அரசு அறிவித்துள்ளது.

>>>>>><<<<<

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டில் கோடைகால கால்பந்து பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது.

>>>>>><<<<<

விளையாட்டுச் செய்திகள்

பேங்காக்கில் நடைபெற்ற சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Ankur Bhattacharjee - Abhinandh Pradhivadhi** இணை பட்டம் வென்றது.

19 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை 11-7, 8-11, 11-8, 11-7 என்ற செட்கணகக்கில் கொரியாவின் **Lee Jungmok – Choi Jiwook** இணையை வென்றது.

>>>>>><<<<<

டெஹ்ரானில் நடைபெற்ற சர்வதேச குதிரையேற்றப் போட்டியில், இந்தியாவின் சூர்யா ஆதித்யா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>>>><<<<<**

பெருவின் லிமாவில் நடைபெற்று வரும் உலக இளையோர் பளுதூக்கும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Parv Chaudhary** வெண்கலப்பதக்கம் வென்றார்.